# சாதாரணக்கூட்டம்

பல்லடம் நகராட்சி தனிஅலுவலரின் சாதாரணக்கூட்டம் 2021 ம் ஆண்டு ஜனவரி மாதம் 29ம் நாள் வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு பல்லடம் நகராட்சி அலுவலக நகர மன்றக்கூடத்தில் நடைபெற உள்ளது.

**தனி அலுவலர்,**
**பல்லடம் நகராட்சி**

## பொருள் : 01

பல்லடம் நகராட்சியில் 'பல்லடம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2020–21'ன் கீழ் கீழ்க்காணும் பணிக்கு 05.01.2021ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப் புள்ளிகளின் ஒப்புநோக்குப் பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்:18 அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு கலை அரங்கம் அமைத்தல் | 10.00 | திரு.P.திருமூர்த்தி , ஒப்பந்ததாரர், பல்லடம் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 1.46% அதிகம் |
| | | | திரு.P.சண்முகம், ஒப்பந்ததாரர், பல்லடம் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.19% குறைவு |

(ந.க.எண்: 1277/2020/இ1)

மேற்காணும் பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு.P.சண்முகம்,ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று 06.01.2021 அன்று தனி அலுவலர் அவர்கள் முன்அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**
மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண் 04/ நாள் : 29.01.2021 அனுமதிக்கப்படுகிறது.**

## பொருள் : 02

நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சிறப்பு சாலைகள் திட்டம் (SRP) 2020–2021 ன் கீழ் தார் சாலைகள் புதுப்பித்தல் பணி 12.01.2021 தேதியன்று நடைபெற உள்ள ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு மாநில அளவில் தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களில் 23.12.2020 ஆம் தேதியில் விளம்பரம் செய்தமைக்கான தொகை ரூ.90,562/– ''பிரைட் அட்வர்டைசிங், சென்னை'' அவர்களிடமிருந்து 11.01.2021 அன்று பட்டியல் வரப்பெற்றுள்ளது. எனவே மேற்கண்ட பட்டியல் தொகை ரூ.90,562/–ஐ ''பிரைட் அட்வர்டைசிங், சென்னை'' அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்:1242/2020/இ1)

**அலுவலகக் குறிப்பு :**
1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2020–2021 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண் 05/ நாள் : 29.01.2021 அனுமதிக்கப்படுகிறது.**

## பொருள் : 03

பல்லடம் நகராட்சி 'சிறப்பு சாலைகள் திட்டம் (SRP) 2020–2021' - சிப்பம்–I ன் கீழ் பல்லடம் நகராட்சி வார்டு எண்:07 சக்தி நகர், கிருஷ்ணா நகர், அபிராமி நகர், வார்டு எண்:08 சேரன் நகர், வார்டு எண்:11 கணபதிநகர் மெயின் சாலை, வார்டு எண்:12 சின்னையா கார்டன், கொசவம்பாளையம் சாலை, கொசவம்பாளையம் முதல் சிடிசி காலனி சாலை, வார்டு எண்:13 நியூ எக்ஸ்டன்சன் வீதி, வார்டு எண்:14 சிடிசி காலனி மெயின் சாலை (டிப்போ செல்லும் சாலை) ஆகிய பகுதிகளில் உள்ள பழுதடைந்த தார் சாலைகளை பேவர் மிசின் கொண்டு புதுப்பித்தல் மற்றும் வார்டு எண்:07 அபிராமி நகர், வார்டு எண்:11 கணபதி நகர் மெயின் சாலையில் மழைநீர் வடிகால் கட்டுதல் மற்றும் வார்டு எண்:14 சிடிசி காலனியில் சிறு பாலம் அமைத்தல் பணிக்கு ரூ.150.00 இலட்சம் மதிப்பீட்டில், 12.01.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. பெறப்பட்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில்நுட்ப உறை திறக்கப்பட்டு சரிபார்க்கப்பட்டது. இதில் இரு ஒப்பந்தப்புள்ளிகளிலும் தொழில்நுட்ப தகுதி பெற்றிருந்ததால், 19.01.2021 அன்று விலைப்புள்ளி ஒப்பந்தப்புள்ளி (Price Bid) உறை திறக்கப்பட்டதில், கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண்:1242/2020/இ1)

| | |
|---|---|
| 1.திருவாளர்கள்.மதுரா இன்ஞ்னியரிங், ஒப்பந்ததாரர், திருப்பூர். | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 7.23% அதிகம் (ரூ.158,61,884/–) |
| 2. திரு.A.மதுரைவீரன், ஒப்பத்ததாரர், பல்லடம். | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 4.84% அதிகம் (ரூ.155,08,977/–) |

**அலுவலகக் குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு.A.மதுரைவீரன்,ஒப்பந்ததாரர் அவர்களிடம் மதிப்பீடு விலை விகிதத்தில் பணி மேற்கொள்ளுமாறு 19.01.2021 ஆம் நாளிட்ட இவ்வலுவலக கடிதத்தின் வாயிலாக தெரிவிக்கப்பட்டது. ஆனால் மேற்படி ஒப்பந்ததாரர் டீசல் விலை ஒவ்வொரு நாளும் கூடுதல் விலை உள்ளதால், ஒப்பந்தப்புள்ளி படிவத்தில் வரிசை எண்:17ல் உள்ள பெயர் பலகை விலை ரூ.18000/–க்கு பதிலாக ரூ.17500/–க்கு பணி மேற்கொள்ள சம்மதம் என தனது கடிதத்தின் வாயிலாக 21.01.2021 அன்று தெரிவித்துள்ளார்.

3. மேற்கண்ட பணிக்கு திரு.A.மதுரைவீரன், ஒப்பந்ததாரர் 4.84% (ரூ.155,08,977/–) மதிப்பீட்டை விட கூடுதலாக அளித்துள்ளதால், ஒப்பந்ததாரர் குறிப்பிட்டுள்ளவாறு விலை குறைப்பு செய்து ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதில், 4.82% (ரூ.155,06,177/–) மதிப்பீட்டை விட கூடுதலாக உள்ளது. மேலும், மேற்கண்ட பணியானது 'திட்டப் பணி' என்பதால், குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்கப்பட வேண்டும் என கருத்தில் கொண்டு மதிப்பீட்டை விட கூடுதலாக 4.82% (ரூ.155,06,177/–) க்கு பணி மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதி வழங்கலாம்.

4.மேற்படி பணிக்கு மதிப்பீட்டை விட கூடுதலாகும் செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மற்றும் திருத்திய வரவு, செலவு திட்டத்தில் சேர்க்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண் 06/ நாள் : 29.01.2021 அனுமதிக்கப்படுகிறது.**

## பொருள் : 04

பல்லடம் நகராட்சி 'சிறப்பு சாலைகள் திட்டம் (SRP) 2020–2021' - சிப்பம்–II ன் கீழ் பல்லடம் நகராட்சி வார்டு எண்:06 மாகாளியம்மன் கோவில் வீதி, கருப்பராயன் கோவில் வீதி, பச்சாபாளையம் மயானம் சாலை, வார்டு எண்:08 அண்ணாமலையார் நகர், கிருஷ்ணா நகர், வார்டு எண்:12 மாருதி நகர், கேவிகே நகர், வார்டு எண்:14 பெரியார் நகர் (வைஸ் மண்டபம்), பாலாஜி நகர், துரைசாமி நகர், வார்டு எண்:16 பெரியார் நகர், வார்டு எண்: 18 குமரன் நகர், பாவேந்தர் வீதி, பிடிஓ காலனி, சி.ஆர். பிள்ளை லே அவுட் ஆகிய பகுதிகளில் உள்ள பழுதடைந்த தார் சாலைகளை பேவர் மிசின் கொண்டு புதுப்பித்தல் மற்றும் வார்டு எண்:10 வடுகபாளையம் அரிசன காலனியில் கான்கிரீட் தளம் புதுப்பித்தல் பணிக்கு ரூ.150.00 இலட்சம் மதிப்பீட்டில், 12.01.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. பெறப்பட்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் தொழிற்நுட்ப உறை திறக்கப்பட்டு சரிபார்க்கப்பட்டது. இதில் இரு ஒப்பந்தப்புள்ளிகளிலும் தொழிற்நுட்ப தகுதி

பெற்றிருந்ததால், **19.01.2021** அன்று விலைப்புள்ளி ஒப்பந்தப்புள்ளி (Price Bid) உறை திறக்கப்பட்டதில், கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண்:1242/2020/இ1)

| | |
|---|---|
| **1.** திரு.V.கருப்பசாமி, ஒப்பத்ததாரர், பல்லடம். | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட **6.01%** அதிகம் (ரூ.**156,51,669/–**) |
| 2.திருவாளர்கள். உமையாள் கன்ஸ்ட்ரக்ஸன்ஸ், ஒப்பந்ததாரர், பல்லடம். | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட **4.98%** அதிகம் (ரூ.**155,00,332/–**) |

**அலுவலகக் குறிப்பு :**

**1.** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**2.** மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திருவாளர்கள்.உமையாள் கன்ஸ்ட்ரக்ஸன்ஸ்,ஒப்பந்ததாரர் அவர்களிடம் மதிப்பீடு விலை விகிதத்தில் பணி மேற்கொள்ளுமாறு **19.01.2021** ஆம் நாளிட்ட இவ்வலுவலக கடிதத்தின் வாயிலாக தெரிவிக்கப்பட்டது. ஆனால் மேற்படி ஒப்பந்ததாரர் ஆட்கள் கூலி, தார் விலை, இதர மூலப்பொருட்களின் விலை உயர்வு காரணமாக, ஒப்பந்தப்புள்ளி படிவத்தில் வரிசை எண்: **9** ல் உள்ள PCC **1:2:4** விலை ரூ.**5461/–**க்கு பதிலாக ரூ.**5445/–**க்கு பணி மேற்கொள்ள சம்மதம் என தனது கடிதத்தின் வாயிலாக **21.01.2021** அன்று தெரிவித்துள்ளார்.

**3.** மேற்கண்ட பணிக்கு திருவாளர்கள்.உமையாள் கன்ஸ்ட்ரக்ஸன்ஸ், ஒப்பந்ததாரர் **4.98%** (ரூ.**155,00,332/–**) மதிப்பீட்டை விட கூடுதலாக அளித்துள்ளதால், ஒப்பந்ததாரர் குறிப்பிட்டுள்ளவாறு விலை குறைப்பு செய்து ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதில், **4.96%** (ரூ.**154,97,788/–**) மதிப்பீட்டை விட கூடுதலாக உள்ளது. மேலும், மேற்கண்ட பணியானது 'திட்டப் பணி' என்பதால், குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்கப்பட வேண்டும் என கருத்தில் கொண்டு மதிப்பீட்டை விட கூடுதலாக **4.96%** (ரூ.**154,97,788/–**)க்கு பணி மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதி வழங்கலாம்.

**4.**மேற்படி பணிக்கு மதிப்பீட்டை விட கூடுதலாகும் செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மற்றும் திருத்திய வரவு, செலவு திட்டத்தில் சேர்க்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண் 07/ நாள் : 29.01.2021 அனுமதிக்கப்படுகிறது.**

**பொருள் : 05**

பல்லடம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் முடி திருத்தகம், அழகு நிலையம்/ ஸ்பா/மசாஜ் நிலையம் ஆகியவற்றிற்கு உரிமம் பெறுவதற்கான விண்ணப்பத்தினை மாவட்ட அளவிலான தமிழ் மற்றும் ஆங்கிலம் தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்பட்டதற்கான விபரம் கீழ்கண்டவாறு :-

| | | |
|---|---|---|
| 1 | தினமணி நாளிதழ் ( தமிழ் நாளிதழ்)<br>எக்ஸ்பிரஸ் பப்ளிகேசன்ஸ், மதுரை (பிரைவேட் லிமிடெட்) | ரூ.**10752/–** |
| 2 | பிரைட் அட்வர்டைஸ்மென்ட்<br>ஆயிரம் விளக்கு, சென்னை. | ரூ.**57330/–** |
| | **மொத்தம்** | **68082/–** |

எனவே, மேற்கண்ட விளம்பரம் செய்த நிறுவனங்களுக்கான தொகையை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் 08/ நாள் : 29.01.2021 அனுமதிக்கப்படுகிறது.**

**பொருள் : 06**

திருப்பூர் மாவட்டம், பல்லடம் வட்டம், பல்லடம் கிராமம், புல எண் **310/1ஏ1**, காலையில் உள்ள இடமானது பு.ஹெக்டேர் **1.765** விஸ்தீரணம் உள்ள இடமானது வருவாய் ஆவணங்களின்படி மேய்ச்சல் தரை என வகைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும், அவ்விடத்தில் **25** ஆண்டுகளுக்கு மேலாக திருமதி.கவிதா க/பெ செந்தில்குமார் உட்பட **40** நபர்களுக்கு இலவச வீட்டுமனை பட்டா வழங்க உத்தேசித்து பல்லடம் கிராம நிர்வாக அலுவலர் அறிக்கை சமர்ப்பித்துள்ளதாகவும்,

அதன்பேரில் நகராட்சியில் தீர்மானம் கோரி நிலவருவாய் அலுவலர், பல்லடம் உள்வட்டம், பல்லடம் வட்டம், அவர்கள் ந.க.எண் :22/2021 நாள் : 25.01.2021ல் சமர்ப்பித்துள்ளார்கள்.

மேற்காண் இடமானது மேய்ச்சல் தரையாக வகைப்பாடு செய்யப்பட்டு, வருவாய்த்துறைக்கு சொந்தமானதாலும், நகராட்சிக்கு சொந்தமான இடமாக இல்லாததாலும், பட்டா வழங்க நகராட்சிக்கு ஏதும் ஆட்சேபனை இல்லை என தெரிவிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் 137/2021/எப்1)

**தீர்மானம் எண் 09/ நாள் : 29.01.2021 அனுமதிக்கப்படுகிறது.**

**பொருள் : 07**

அரசாணை (நிலை) எண்:368, நிதித் (SFC-MC) துறை, நாள்:07.10.2020ன் படி, மாநில உயர்மட்டக் குழுவின் நேரடி பார்வையின் கீழ் உள்ளாட்சி அமைப்புகளுக்கு அவசியமாக தேவைப்படும் அடிப்படை கட்டமைப்புகளுக்கான “ஒரு முறை சிறப்புத் திட்டத்தின் (One Time Special Scheme)” கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ள திட்டப் பிரேரணை தயார் செய்து கருத்துருக்களை சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக மாநில உயர்மட்ட குழுவிற்கு அனுப்பி வைக்குமாறு ஆணையிடப்பட்டுள்ளது. மேற்படி, அரசாணையில் தெரிவிக்கப்பட்டவாறு, அடிப்படை வசதிகள் கட்டமைப்புகளுக்கான கருத்துருக்களை மாவட்ட ஆட்சியர் மூலமாக நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் வழியாக மாநில உயர்மட்டக் குழுவிற்கு பரிந்துரை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

பல்லடம் நகராட்சியில் கீழ்க்கண்ட அடிப்படை கட்டமைப்புகளுக்கான பணிகள் அவசியம் தேவைப்படுவதால் அப்பணிகளை “ஒரு முறை சிறப்புத் திட்டத்தின் (One Time Special Scheme)” கீழ் ரூ.58.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே, கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டி, தலைவர்/ அரசு தலைமை செயலாளர், மாநில உயர்மட்ட குழு, சென்னை அவர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர், திருப்பூர் அவர்கள் மூலம் திட்டப் பிரேரணை பரிந்துரை செய்து உரிய நிதி உதவி பெற மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அவசியம் தேவைப்படும் அடிப்படை வசதிகளுக்கான பணிகளின் விபரம் :–**

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | பல்லடம் நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்:06 பச்சாபாளையம் மயானத்திற்கு புதியதாக சுற்றுச்சுவர், காத்திருப்போர் அறை மற்றும் அணுகுபாதை அமைத்தல் | **19.00** |
| 2 | பல்லடம் நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்:01 கல்லம்பாளையம், வார்டு எண்:07 இராயர்பாளையம், வார்டு எண்:16 மாணிக்காபுரம் சாலை ஆகிய பகுதிகளில் உள்ள மயானத்திற்கு பராமரித்தல் பணி மேற்கொள்ளுதல் | **16.00** |
| 3 | பல்லடம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 4 எண்ணிக்கை உயர்மின் கோபுர விளக்குகள் மற்றும் 6 எண்ணிக்கை சிறியமின் கோபுர விளக்குகளில் பொருத்தப்பட்டுள்ள 60 எண்ணிக்கை 400W சோடியம் ஆவி விளக்குகளுக்கு பதிலாக புதியதாக 150W LED விளக்குகள் மாற்றுதல் | **15.00** |
| 4 | பல்லடம் நகராட்சி வார்டு எண்:01 கல்லம்பாளையம், வார்டு எண்:04 காமராஜ் நகர், வார்டு எண்:07 கிருஷ்ணா நகர், மீனாட்சி அவென்யூ, வார்டு எண்:08 அண்ணாமலை நகர், சேரன் நகர், இட்டேரி வீதி, பனப்பாளையம் திருச்சி சாலை, வார்டு எண்:10 பாவடி தோட்டம், வார்டு எண்:11 காளியப்பா நகர், குமரன் நகர் , இன்ட் ராயல் விலா, கணபதி நகர், வார்டு எண்:12 சின்னையா கார்டன், வார்டு எண்:14 செட்டிபாளையம் சாலை, பாலாஜி நகர், யுவராணி நகர், துரைசாமி நகர், வார்டு எண்:15 அண்ணாநகர் மற்றும் வார்டு எண்:18 காந்தி நகர் ஆகிய பகுதிகளில் ஏற்கனவே உள்ள மின்கம்பங்களில் தெருவிளக்குகள் இல்லாததால் புதியதாக Street light Phase | **8.00** |

| | | |
|---|---|---|
| | line இழுத்து **110** எண்ணிக்கை 15W LED விளக்குகள் அமைத்தல் | |
| | **மொத்தம்** | **58.00** |

**(ந.க.எண்: 153/2021/இ1)**

**<u>அலுவலகக் குறிப்பு :</u>**
மன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>தீர்மானம் எண் 10/ நாள் : 29.01.2021 அனுமதிக்கப்படுகிறது.</u>**

**பொருள் : 08**

பல்லடம் நகராட்சி, தூய்மை இந்தியா திட்டம் – திடக்கழிவு மேலாண்மை விதிகளின் செயல்பாடுகளின் அடிப்படையில் மத்திய அரசின் MOUD துறையினர் மூலம் ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்புகளுக்கும் Star Rating அங்கீகாரம் வழங்கி வருகின்றனர். அதன்படி, பல்லடம் நகராட்சியில் சேகரமாகும் திடக்கழிவுகளை திடக்கழிவு மேலாண்மை விதிகளின்படி தரம் பிரித்து முறையே, சேகரிப்பது முதல் இறுதியாக்கம் செய்வது வரையிலான பணிகள் சிறப்பான முறையில் கையாளப்பட்டு வருகிறது. மேலும், Secondary Storage and Transportation செய்வது முற்றிலும் தவிர்க்கப்பட்டுள்ளது. இந்நகராட்சிக்கு தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் ODF+ சான்றும் பெறப்பட்டு நடைமுறையில் உள்ளது.

எனவே, பல்லடம் நகராட்சியினை குப்பையில்லா நகராட்சியாக (Garbage free City) மூன்று நட்சத்திர அங்கீகாரம் வேண்டி (Three Star Rating), சுய உறுதிமொழி சான்றிதழ் (Self Declaration) பெற மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**
பொது சுகாதார அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண் 11/ நாள் : 29.01.2021 அனுமதிக்கப்படுகிறது.</u>**

**<u>பொருள் : 09</u>**

வார்டு எண் : **15** அண்ணாநகர் ஓம் சக்தி கோவில் பகுதியில் உள்ள பொதுமக்கள் அப்பகுதியில் உள்ள மழைநீர் வடிகால் பழுதாகியுள்ளதால், கழிவுநீர் தேங்கி சுகாதார கேடு ஏற்படுவதாக தெரிவித்துள்ளனர். எனவே, மேற்படி பகுதியில் முதல் மற்றும் இரண்டாவது வீதியில் ஏற்கனவே உள்ள மழைநீர் வடிகாலை பராமரிப்பதற்கும் மற்றும் புதியதாக மழைநீர் வடிகால் அமைத்தல் பணிகள் மேற்கொள்ளவும், அப்பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடுத் தொகை ரூ.**4.90** இலட்சத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி மன்றப் பொருள் வைக்கப்படுகிறது. **(ந.க.எண்: 1288/2020/இ1)**

**<u>அலுவலகக் குறிப்பு :</u>**
1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணியினை பொது நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2020–2021 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளலாம்.

**<u>தீர்மானம் எண் 12/ நாள் : 29.01.2021 அனுமதிக்கப்படுகிறது.</u>**

**<u>பொருள் : 10</u>**

வார்டு எண் :**01** கல்லம்பாளையம் மங்கலம் பிரதான சாலையில் கழிவுநீர் செல்வதற்கு Disposal Point இல்லாத காரணத்தினால் அரிசன காலனி குடியிருப்பு பகுதியிலிருந்து வெளி வரும் கழிவுநீர் சாலையின் முன்பு தேங்கி சுகாதார கேடு ஏற்படும் நிலையில் உள்ளதால், கல்லம்பாளையம் சாலையின் குறுக்கே RCC Pipe பதித்து இரு பக்கமும் Manhole அமைத்து, அருகில் உள்ள ஏற்கனவே அமைக்கப்பட்ட கழிவுநீர் தொட்டிக்கு (RCC sump) இணைப்பு செய்தால் கழிவுநீர் தேங்கா வண்ணம் இருக்கும். எனவே மேற்கண்ட பணி மேற்கொள்ளவும், அப்பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடுத் தொகை ரூ.**1.50** இலட்சத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி மன்றப் பொருள் வைக்கப்படுகிறது. **(ந.க.எண்: 1288/2020/இ1)**

**<u>அலுவலகக் குறிப்பு :</u>**
1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணியினை பொது நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2020–2021 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளலாம்.

**<u>தீர்மானம் எண் 13/ நாள் : 29.01.2021 அனுமதிக்கப்படுகிறது.</u>**

## பொருள் : 11

வார்டு எண் : 11 வடுகபாளையம் ஸ்ரீ நகர் இரண்டாவது வீதி மற்றும் குமரன் நகர் மூன்றாவது வீதியில் உள்ள பொதுமக்கள் அப்பகுதியில் கழிவுநீர் வடிகால் வசதி இல்லாததால் சுகாதார சீர்கேடு ஏற்படுவதாகவும் ஆகவே, அப்பகுதிக்கு மேற்படி வசதிகளை செய்து தருமாறு கோரிக்கை வைத்துள்ளனர். அக்கோரிக்கையினை பல்லடம் சட்டமன்ற உறுப்பினர் பரிந்துரை செய்துள்ளார். எனவே, மேற்படி பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கவும், அப்பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடுத் தொகை ரூ.9.00 இலட்சத்தை பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டியும் மன்றப் பொருள் வைக்கப்படுகிறது. (ந.க.எண்: 1288/2020/இ1)

**அலுவலகக் குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணியினை பொது நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2020–2021 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண் 14/ நாள் : 29.01.2021 அனுமதிக்கப்படுகிறது.**

## பொருள் : 12

பல்லடம் நகராட்சி அலுவலகத்தில் அனைத்து பிரிவுகளிலும் பயன்படுத்தக்கூடிய பிரிண்டர்களில் உள்ள ரீபில் செய்தல், ரீ கண்டிசன் செய்தல் மற்றும் கலர் பிரிண்டருக்கு புதியதாக டோனர்கள் சப்ளை செய்தல் ஆகிய பணிகளுக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடுத் தொகை ரூ.2.00 இலட்சத்தை பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி மன்றப் பொருள் வைக்கப்படுகிறது. (ந.க.எண்: 1288/2020/இ1)

**அலுவலகக் குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணியினை பொது நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2020–2021 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண் 15/ நாள் : 29.01.2021 அனுமதிக்கப்படுகிறது.**

## பொருள் : 13

வார்டு எண் :16 என்.ஜி.ஆர். சாலையில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான வணிக வளாகம் உள்ளது. அதில் தரைத்தளத்தில் 40 எண்ணிக்கை கடைகள் இயங்கி வருகிறது. மேற்கண்ட கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு சுமார் 22 வருடங்கள் ஆனதால், தற்போது சுமார் 15 கடைகளின் உட்புறம் celling Plastering உடைந்து கம்பிகள் (Steel Reinforcement) தெரிகிறது. மேலும், open terrence ல் உள்ள Weathering course மற்றும் Pressed Tiles மிகவும் பழுதடைந்து உள்ளதால் மழைக் காலங்களில் தண்ணீர் புகுந்து RCC Roof வழியாக சென்று கட்டிடம் மிகவும் மோசமடைந்துள்ளதால், கடைகளுக்கு வரும் பொதுமக்களின் நலன் கருதி புதியதாக Weathering course மற்றும் Pressed Tiles அமைக்கவும் மற்றும் கட்டிடத்தின் உள்ளே ஏற்பட்ட பழுதுகளை அவசியம் சரி செய்ய வேண்டும். மேலும், இதற்கு முன்னால் கடந்த 22 வருடங்களுக்கு மேற்கண்ட வணிக வளாகத்திற்கு எந்த ஒரு பழுது பார்த்தல் பணிகளும் மேற்கொள்ளப்படவில்லை. எனவே, மேற்கண்ட பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடுத் தொகை ரூ.9.80 இலட்சத்தை பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி மன்றப் பொருள் வைக்கப்படுகிறது. (ந.க.எண்: 1288/2020/இ1)

**அலுவலகக் குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணியினை பொது நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2020–2021 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண் 16/ நாள் : 29.01.2021 அனுமதிக்கப்படுகிறது.**

## பொருள் : 14

பல்லடம் நகராட்சி அலுவலக அனைத்து பிரிவுகளிலும் பயன்படுத்தக்கூடிய கணினிகள், பிரிண்டர்கள், ஸ்கேனர், யூ.பி.எஸ். மற்றும் அம்மா உணவகம், மாதப்பூர் உரக்கிடங்கில் உள்ள கண்காணிப்பு கேமிராக்களுக்கு வருடாந்திர பராமரிப்பு செய்ய ஆகும் உத்தேச மதிப்பீட்டுத்

தொகை ரூ.2.40 இலட்சத்தை பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி மன்றப் பொருள் வைக்கப்படுகிறது. (ந.க.எண்: 1288/2020/இ1)

**அலுவலகக் குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணியினை பொது நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2020–2021 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண் 17/ நாள் : 29.01.2021 அனுமதிக்கப்படுகிறது.**

## பொருள் : 15

பல்லடம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் பயன்படுத்தி வரும் வாகனம் எண் : TN42 R 9648 க்கு Gas Kit Head மற்றும் Radiator ஆகியவற்றில் பழுதினை சரிசெய்வதற்கு கீழ்கண்ட நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ.எண் | விலைப்புள்ளிதாரரின் பெயர் | விலைப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|
| 1 | M/s சம்பத் ஆட்டோ கேரேஜ், லட்சுமி விநாயகர் நகர், மருதமலை மெயின் ரோடு, பி.என்.புதூர், மருதமலை. | 18000 |
| 2 | M/s பெஸ்ட் மோட்டார்ஸ் ஒர்க், நரிப்பள்ளம் ரோடு, ஓடந்துறை, மேட்டுப்பாளையம் 641 301 | 16500 |
| 3 | M/s மேட்டுபாளையம் ஆட்டோ சர்வீஸ் சென்டர்,ராஜா நகர், திருப்பூர். | 14800 |

மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள M/s மேட்டுபாளையம் சர்வீஸ், ராஜா நகர், திருப்பூர், அவர்களின் விலைப்புள்ளியை ஏற்கவும், அதற்காகும் செலவின தொகை வழங்கவும், அவசர அவசியத்தை கருதி தனி அலுவலரின் முன் அனுமதி எதிர்நோக்கி பணி உத்தரவு வழங்கவும், மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. பொது சுகாதார அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள M/s மேட்டுபாளையம் ஆட்டோ சர்வீஸ் சென்டர், ராஜா நகர், திருப்பூர் அவர்களின் விலைப்புள்ளியை ஏற்கவும், அதற்கான தொகை வழங்கவும், அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதினை எதிர்நோக்கி பணி உத்தரவு வழங்கவும், மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் 18/ நாள் : 29.01.2021 அனுமதிக்கப்படுகிறது.**

## பொருள் : 16

பல்லடம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் பயன்படுத்தி வரும் வாகனம் எண் : TN42 AA 4831 க்கான Clutch cover assembly. FC Work, Tinger works, Painting Works, Electrical works, Oil Service, General checkup பழுதுகளை சரிசெய்வதற்கு கீழ்கண்ட நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ.எண் | விலைப்புள்ளிதாரரின் பெயர் | விலைப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|
| 1 | M/s சம்பத் ஆட்டோ கேரேஜ், லட்சுமி விநாயகர் நகர், மருதமலை மெயின் ரோடு, பி.என்.புதூர், மருதமலை. | 180540 |
| 2 | M/s பெஸ்ட் மோட்டார்ஸ் ஒர்க், நரிப்பள்ளம் ரோடு, ஓடந்துறை, மேட்டுப்பாளையம் 641 301 | 171631 |
| 3 | M/s மேட்டுபாளையம் ஆட்டோ சர்வீஸ் சென்டர், ராஜா நகர், திருப்பூர். | 158946 |

மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள M/s மேட்டுபாளையம் சர்வீஸ், ராஜா நகர், திருப்பூர், அவர்களின் விலைப்புள்ளியை ஏற்கவும், அதற்காகும் செலவின தொகை வழங்கவும், அவசர அவசியத்தை கருதி தனி அலுவலரின் முன் அனுமதி எதிர்நோக்கி பணி உத்தரவு வழங்கவும், மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. பொது சுகாதார அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள M/s மேட்டுபாளையம் ஆட்டோ சர்வீஸ் சென்டர், ராஜா நகர், திருப்பூர் அவர்களின் விலைப்புள்ளியை ஏற்கவும், அதற்கான தொகை வழங்கவும், அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதினை எதிர்நோக்கி பணி உத்தரவு வழங்கவும், மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் 19/ நாள் : 29.01.2021 அனுமதிக்கப்படுகிறது.**

**பொருள் : 17**

பல்லடம் நகராட்சியில் பொது நிதி 2020–2021ன் கீழ் கீழ்க்காணும் 7 பணிகளுக்கு 22.01.2021ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப் புள்ளிகளின் ஒப்புநோக்குப் பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண் :04 செந்தோட்டம் முதல் வீதியில் புதியதாக மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி | 7.75 | திரு.P.முருகன், ஒப்பந்ததாரர், பல்லடம் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 1.56% அதிகம் |
| | | | திரு. C.சண்முகம், ஒப்பந்ததாரர், பல்லடம் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.09% குறைவு |
| 2 | வார்டு எண் :04 செந்தோட்டம் இரண்டாவது வீதியில் புதியதாக மழைநீர் வடிகால் மற்றும் ஆர்.சி.சி. சிமெண்ட் பைப் அமைக்கும் பணி | 7.45 | திரு.P.திருமூர்த்தி, ஒப்பந்ததாரர், பல்லடம் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 1.68% அதிகம் |
| | | | திரு. P.சண்முகம், ஒப்பந்ததாரர், பல்லடம் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.11% குறைவு |
| 3 | நகராட்சிக்கு சொந்தமான பொது சுகாதாரப் பிரிவு வாகனம் எண் TN 42 F 9285–ல் சேசிஸ், வண்டியின் தரைப்பகுதி மற்றும் கதவுகள் பழுதடைந்துள்ளதை சரி செய்தல் | 2.00 | திருவாளர்கள். மேட்டுப்பாளையம் ஆட்டோ சர்வீஸ் சென்டர், திருப்பூர் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.60% குறைவு |
| | | | திருவாளர்கள். பேஸ்ட் மோட்டார் வோர்க்ஸ், மேட்டுப்பாளையம் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 9.29% அதிகம் |
| 4 | வார்டு எண் :02 சேடபாளையம் குமரன் கார்டன், வார்டு எண் :04 பி.எம்.எஸ் நகர், வார்டு எண் :06 கருப்பாண்டி சந்து, வார்டு எண் :08 பனப்பாளையம் பெத்தாம்பாளையம் சாலை, திருப்பூர் ரோடு கரையாம்புதூர், வார்டு எண் :12 சி.டி.சி. காலனி முதல் வீதி, சின்னையா கார்டன், ராஜ கணபதி நகர், வார்டு எண் :14 ஸ்ரீ பாலாஜி நகர், வார்டு எண் :16 ஜே.கே.ஜே. காலனி ஆகிய பகுதிகளில் புதியதாக பிவிசி மற்றும் ஜி.ஐ குழாய் அமைக்கும் பணி | 9.00 | திரு.P.முருகன், ஒப்பந்ததாரர், பல்லடம் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.08% குறைவு |
| | | | திரு.V.கருப்பசாமி, ஒப்பந்ததாரர், பல்லடம் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 2.05% அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 5 | வார்டு எண் :02,03,05,06,12 மற்றும் 17 ல் உள்ள மேற்குபல்லடம் அரிசன காலனி, பள்ளிவாசல் வீதி, சேடபாளையம் முத்துக் கவுண்டர் வீதி, பச்சாபாளையம் மந்திரி கவுண்டர் வீதி, இரகீம் சாகிப் வீதி, தர்கா விதி, கொசவம்பாளையம் போயர் வீதி, காமராஜர் நகர் மற்றும் நாரணாபுரம் பகுதிக்கு ஆழ்துளைக் கிணற்றிலிருந்து இதர பயன்பாட்டிற்கு ஏற்கனவே உள்ள ஜி.ஐ இரும்பு குழாய்களை அகற்றி புதியதாக பிவிசி குழாய் பதித்தல் பணி | 1.50 | திரு.P.முருகன், ஒப்பந்ததாரர், பல்லடம் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.11% குறைவு |
| | | | திரு.V.கருப்பசாமி, ஒப்பந்ததாரர், பல்லடம் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 1.92% அதிகம் |
| 6 | நகராட்சி அலுவலகம், அம்மா உணவகம் மற்றும் ஆண்டாள் நகர், மாதப்பூர் நுண்ணுயிர் உரமாக்குதல் மையம் (MCC) ஆகிய இடங்களில் உள்ள 18 எண்ணிக்கையிலான தீயணைப்பு கருவிகளை புதுப்பித்து மறுநிரப்புதல் (Refilling) செய்யும் பணி | 1.60 | திருவாளர்கள்.பயர் ஸ்டாப் இன்ஜினியரிங், கோவை | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.06% குறைவு |
| | | | திருவாளர்கள்.மகா இன்ஜினியர்ஸ் அன்ட் கான்ட்ராக்டர்ஸ், கோவை | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 1.91% அதிகம் |
| 7 | நகராட்சி அலுவலக வளாகத்தில் வடக்கில் உள்ள கட்டிடத்தின் முதல் தளத்தில் புதியதாக பதிவறை கட்டுதல், ஆணையாளர் அறை, பொறியியல் பிரிவு, சுகாதார பிரிவு மற்றும் நகரமைப்பு ஆய்வாளர் அறை ஆகியவை பழுது பார்த்தல் பணி மேற்கொள்ளுதல் | 10.00 | திரு.V.கருப்பசாமி, ஒப்பந்ததாரர், பல்லடம் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.12% குறைவு |
| | | | திரு.P.முருகன், ஒப்பந்ததாரர், பல்லடம் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 1.79% அதிகம் |

(ந.க.எண்: 1288/2020/இ1)

மேற்காணும் 7 பணிகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவான கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்க தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண் 20/ நாள் : 29.01.2021 அனுமதிக்கப்படுகிறது.**

**பொருள் : 18**

பல்லடம் நகராட்சியில் 72வது இந்திய குடியரசு தினவிழாவினை முன்னிட்டு சிறப்பிக்கும் வகையில் நகராட்சிக்குட்பட்ட 18 வார்டுகளிலும் உள்ள பொது மக்களுக்கு நகராட்சியின் சிறப்பினை எடுத்துரைக்கும் வகையில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் நகரினை தூய்மையாக வைத்துள்ள முன் உதாரணமாகவுள்ள வீட்டின் உரிமையாளர்கள் சிலரினை தேர்வு செய்து அவர்களை அழைத்து கௌரவித்தும், மேலும் குடியரசு தினவிழா நிகழ்ச்சியில் சிறப்பாக நடத்த நகராட்சி கட்டிடத்தை ஒளிரும் வகையில் வண்ண மின்விளக்குகள், சேர் டேபிள், ஒலிப்பெருக்கி மற்றும் தரைவிரிப்புகள் ஆகியவற்றினை வாடகை அடிப்படையில் பணி மேற்கொள்ள உத்தேச தொகை ரூ.30,000 ஆகும். பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களால் 18.01.2021 தேதி அன்று முன்அனுமதி பெறப்பட்டதை தொடர்ந்து உள்ளூர் விலைப்புள்ளிகள் நேரில் பெறப்பட்டது.

அதன் விபரம் :-

1. குரு ஆடியோஸ் அன்ட் லைட்டிங்ஸ், திருச்சி சாலை, பல்லடம் – ரூ.30,800/–
2. திரு.B.SHAFFI, பாத்திமா ஆடியோஸ், மங்கலம் சாலை, பல்லடம் – ரூ.29,500/–
3. டி கிராண்ட் டெக்கர்ஸ், மங்கலம் சாலை, பல்லடம் – ரூ.31,200/–

பெறப்பட்ட 3 விலைப்புள்ளிகளில் குறைவாக அளித்துள்ள திரு.B.SHAFFI, பாத்திமா ஆடியோஸ், மங்கலம் சாலை, பல்லடம் அவர்களுக்கு தனி அலுவலர் அவர்களால் 20.01.2021 அன்று முன்அனுமதி பெறப்பட்டதைத் தொடர்ந்து பணி ஆணை வழங்கியதையும் மற்றும் ஒப்படைப்பு பணியாக மேற்கொண்டதையும் அதற்கான பில் தொகை வழங்குவதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்:239/2021/இ1)

**அலுவலகக் குறிப்பு :**

1.மன்றம் அனுமதி வழங்கலாம்.

2.மேற்கண்ட பணிக்கு தனி அலுவலர் முன் அனுமதி வழங்கியதையும் மற்றும் பணி மேற்கொண்டதையும் ஒப்படைப்பு பணியாக வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
3.2020–2021 ஆம் ஆண்டு திருத்திய வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண் 21/ நாள் : 29.01.2021 அனுமதிக்கப்படுகிறது.**

**பொருள் : 19**

வார்டு எண் : 15 அண்ணாநகர் நகராட்சி தொடக்கப்பள்ளியில் பல இடங்களில் பழுது ஏற்பட்டு பராமரிப்பு இன்றி உள்ளது. தற்போது 2021 ஆம் ஆண்டு சட்டசபை தேர்தல் நடைபெற இருப்பதால், பள்ளிக் கட்டிடத்தை பராமரிக்கவும், புதியதாக சிறுநீர், கழிப்பிட வசதி மேற்கொள்ளுதல் மற்றும் மின்சார வசதி ஏற்படுத்துதல் போன்ற பணிகளை மேற்கொள்ளவும் அப்பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடுத் தொகை ரூ.4.90 இலட்சத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி மன்றப் பொருள் வைக்கப்படுகிறது. (ந.க.எண்: 1288/2020/இ1)

**அலுவலகக் குறிப்பு :**
1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2.மேற்கண்ட பணியினை பொது நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2020–2021 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண் 22/ நாள் : 29.01.2021 அனுமதிக்கப்படுகிறது.**

**பொருள் : 20**

அரசாணை நிலை எண் : 105, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல(கொடு.தடு2) துறை நாள் : 19.10.2020 ல் ஆதிதிராவிடர், பழங்குடியினர், கிருஸ்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் இனத்தவர்களின் ஈமச்சடங்கிற்கு வழங்கப்படும் தொகையை ரூ.2500/- லிருந்து ரூ.5000/- ஆக உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது. மேற்கண்ட ஆணையை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**
அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் 23/ நாள் : 29.01.2021 அனுமதிக்கப்படுகிறது.**

**பொருள் : 21**

வார்டு எண் : 04, மங்கலம் சாலை இளங்கோ வீதி, பி.எம்.எஸ். நகர் பகுதியில் உள்ள பொதுமக்கள் அப்பகுதியில் சிறுபாலம் உடைப்பு ஏற்பட்டு பழுதடைந்து உள்ளதாகவும், புதியதாக சிறுபாலம் அமைத்து தருமாறு கோரிக்கை வைத்துள்ளனர். எனவே, மேற்படி பகுதியில் உள்ள பழுதடைந்த சிறுபாலத்தின் Deck slab அப்புறப்படுத்தி இருபக்கமும் பக்கசுவர் உயர்த்தி சிறுபாலம் அமைக்கும் பணி மேற்கொள்ளவும், அப்பணிக்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடுத் தொகை ரூ.1.20 இலட்சத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி மன்றப்பொருள் வைக்கப்படுகிறது ( ந.க.எண் : 1288/2020/இ1)

**அலுவலக குறிப்பு**
1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணியினை பொது நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2020- 2021ம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண் 24/ நாள் : 29.01.2021 அனுமதிக்கப்படுகிறது.**

**பொருள் : 22**

பல்லடம் நகராட்சியின் பிரதான கடைவீதியான என்.ஜி.ஆர். சாலையின் மையப்பகுதியில் 19.57 மீ x 4.80 மீ (93.94 ச.மீ) என்ற அளவுள்ள மெட்டல் ஷீட் ரூப் கட்டிடம் கடந்த 2017ம் ஆண்டு பொது நிதியில் கட்டப்பட்டதாகும். அக்கட்டிடத்தில் மறுசுழற்சிக்கு படுத்தகூடிய பிளாஸ்டிக் கழிவுகள் இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக வைக்கப்பட்டிருந்தது. இக்கட்டிடம் என்.ஜி.ஆர் சாலையில் மைய பகுதியில் அமைக்கப்பட்டுள்ளது. இக்கட்டிடத்தின் இடதுபுறம் வார சந்தைகளும், வலதுபுறம் தினசரி மார்க்கெட் கடைகளும் அமைந்துள்ளன. இக்கட்டிடத்தில்

பின்புறம் ஐயப்பன் கோவில் மற்றும் நகராட்சி கடைகள் உள்ளது. பொதுமக்கள் ஏராளமாக வந்து செல்லக்கூடிய பகுதியாகும். இக்கட்டிடத்தின் பின்புறம் ஐயப்பன் கோவில் எதிரில் மலைபோல் மார்க்கெட் கழிவுகள் கட்டிடத்தின் உள்ளே வைக்கப்பட்டிருந்த எளிதில் தீப்பற்றக்கூடிய 10 டன் அளவுள்ள பிளாஸ்டிக் கழிவுகள் அனைத்தும் அப்புறப்படுத்தி பேலிங் மெஷின் மூலம் பண்டில்களாக கட்டி அரியலூர் சிமெண்ட் ஆலைக்கு அனுப்பப்பட்டுள்ளது. தற்போது மேற்குறிப்பிட்ட கட்டிடத்தின் உட்புறமும் வெளிப்பகுதியும் நன்கு சுத்தப்படுத்தப்பட்டது. இக்கட்டிடம் மார்க்கெட்டின் மையப்பகுதியில் அமைந்துள்ளதாலும், கட்டிடத்தை மீண்டும் காலியாக பூட்டி வைத்திருந்தால் கட்டிடம் சேதம் அடைவதோடு மீண்டும் கழிவுகளை போட்டு அசுத்தப்படுத்திவிடவும் வாய்ப்புள்ளது. மேலும், இக்கட்டிடம் அமைவதற்கு முன் இப்பகுதியில் சைக்கிள் நிறுத்தும் இடமாக நகராட்சியால் வாடகைக்கு விடப்பட்டு வருடம் ரூ.30000/- வாடகையாக பெறப்பட்டு வந்துள்ளது. எனவே, இக்கட்டிடத்தை கடையாக மாற்றி பொது ஏலத்தில் வாடகைக்கு விட்டு நகராட்சிக்கு வருவாய் ஈட்டலாம் என உத்தேசித்து கட்டிடத்தை சுற்றியுள்ள கடைகளின் வாடகை, தற்போதைய அங்காடி மதிப்பீடு, பொதுப்பணித்துறையின் மதிப்பீடு மற்றும் கட்டிடத்தின் தன்மை ஆகியவற்றை விரிவாக ஆய்வு செய்து கீழ்கண்டவாறு வாடகை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது : -

| வ.எண் | கட்டிடம் அளவு | தற்போதைய சந்தை மதிப்பீடு ரூ. | பொதுத்துறையின் மதிப்பீடு தொகை ரூ | அருகில் உள்ள கடைகளின் வாடகை தொகை ரூ | நிர்ணயிக்கப்படும் மாத வாடகை தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | 93.94 ச.மீ (மெட்டல் சீட் கூரை) | ரூ.26,000/- | ரூ.15,000/- | ரூ.24,000/- | ரூ.26,000/- |

எனவே, நகராட்சி நிர்வாக நலன் கருதி மேற்படி சந்தை மதிப்பீட்டின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட வாடகையான ரூ.26,000/- னை அரசு மதிப்பீடாக நிர்ணயிக்கவும், அதன் அடிப்படையில் மேற்படி கட்டிடத்தை பொது ஏலம் மூலம் வாடகைக்கு விட்டு வருவாய் ஈட்டவும், மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**
அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் 25/ நாள் : 29.01.2021 அனுமதிக்கப்படுகிறது.**

## பொருள் : 23

நகராட்சி அலுவலகத்திற்கு பல்வேறு வேலை நிமித்தமாக வரும் பொதுமக்களும், நகராட்சி அலுவலக பணியாளர்களும் நகராட்சி அலுவலகத்தின் முகப்பில் அமைந்துள்ள சிறிய கழிப்பறையையே ஆண்களும் பெண்களும் உபயோகப்படுத்தி வருகின்றனர். இக்கழிப்பறை அலுவலகத்தின் முகப்பில் உள்ளதால் துர்நாற்றம் வீசுவதுடன் முகப்பொலிவையும் முகம் சுளிக்க வைக்கிறது. மேலும் கழிப்பிடம் பொதுமக்களுக்கும், அலுவலக பணியாளர்களுக்கும் போதுமானதாகவும் அமையப்பெறவில்லை. மேலும் நகராட்சி பணியாளர்கள் அமர்ந்து உண்ணுவதற்கு உணவு கூடம் இல்லை. எனவே, அனைத்து பணியாளர்களின் வேண்டுகோளை கருத்தில் கொண்டு நகராட்சி அலுவலகம் வரும் பொதுமக்கள் இயற்கை உபாதைகளை போக்கிக்கொள்ள ஏதுவாகவும், நகராட்சி அலுவலகத்தின் பின்புறத்தில் பல ஆண்டுகளாக சேதமடைந்து புதர்மண்டி கிடந்த இடத்தில் ஆண்கள், பெண்கள் என தனித்தனி கழிப்பறைகளும் நகராட்சி பணியாளர்கள் அமர்ந்து உண்ணுவதற்கு உணவு உண்ணும் அறை போன்ற கட்டிடங்கள் கட்ட தீர்மான எண் : 287, நாள் : 30.11.2018ன்படி தீர்மானிக்கப்பட்டு கட்டிமுடிக்கப்பட்டு, பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. அவ்வாறு கட்டப்பட்ட கட்டிடங்களில் கழிப்பறைக்கும், மங்கலம் சாலையில் அமைந்துள்ள நகராட்சி கடைகளுக்கும் இடையே 16.31 ச.மீ அளவுள்ள ஒரு கட்டிடம் மட்டும் தனித்துள்ளது. அக்கட்டிடம் நகராட்சியின் வேறுபயன்பாட்டிற்கு தேவைப்படாததால் அக்கட்டித்தை மட்டும் வாடகை நிர்ணயம் செய்து பொது ஏலம் மூலம் வாடகைக்கு விட்டு நகராட்சிக்கு வருவாய் ஈட்டலாம் என உத்தேசித்து கட்டிடத்தை சுற்றியுள்ள கடைகளின் வாடகை, அங்காடி மதிப்பீடு, பொதுப்பணித்துறையின் மதிப்பீடு மற்றும் கட்டிடத்தின் தன்மை ஆகியவற்றை விரிவாக ஆய்வு செய்து கீழ்கண்டவாறு வாடகை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது :-

| வ. எண் | கட்டிடம் அளவு | தற்போதைய சந்தை மதிப்பீடு ரூ. | பொதுத்துறையின் மதிப்பீடு தொகை ரூ | அருகில் உள்ள கடைகளின் வாடகை தொகை ரூ | நிர்ணயிக்கப்படும் மாத வாடகை தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | 16.31 ச.மீ | ரூ.6,400/- | ரூ.2,600/- | ரூ.5,500/- | ரூ.6,400/- |

எனவே, நகராட்சி நிர்வாக நலன் கருதி மேற்படி சந்தை மதிப்பீட்டின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட வாடகையான ரூ.6,400/- னை அரசு மதிப்பீடாக நிர்ணயிக்கவும், அதன் அடிப்படையில் மேற்படி கட்டிடத்தை பொது ஏலம் மூலம் வாடகைக்கு விட்டு வருவாய் ஈட்டவும், மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**
அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் 26/ நாள் : 29.01.2021** அனுமதிக்கப்படுகிறது.

**தனி அலுவலர்**
**பல்லடம் நகராட்சி**

**/உண்மைநகல்/**

**ஆணையாளர்**
**பல்லடம் நகராட்சி**

# அவசரக்கூட்டம்

பல்லடம் நகராட்சி தனிஅலுவலரின் அவசரக்கூட்டம் 2021 ம் ஆண்டு ஜனவரி மாதம் 12ம் நாள் செவ்வாய்க்கிழமை காலை 11.00 மணிக்கு பல்லடம் நகராட்சி அலுவலக நகர மன்றக்கூடத்தில் நடைபெற உள்ளது.

**தனி அலுவலர்,**
**பல்லடம் நகராட்சி**

## பொருள் : 01

பல்லடம் நகராட்சி வார்டு எண் :18 காந்தி நகர் மற்றும் ஜே.கே.ஜே காலனி பகுதிகளில் வெளியேறும் கழிவுநீர் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி, அரசு கலை கல்லூரி, நகராட்சி தொடக்கப்பள்ளி, பிடிஓ காலனி மற்றும் மாணவர் தங்கும் விடுதி அருகே திறந்தவெளியில் தேங்கி நிற்பதால் சுகாதார கேடு உருவாகி மாணவ மாணவிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும், மேற்படி குடியிருப்பு பகுதிகளில் வெளியேற்றப்படும் கழிவுநீர் கல்வி நிறுவனங்கள் பகுதிகளில் சேகரமாவதால், அப்பகுதி முழுவதும் சுகாதார சீர்கேடு ஏற்படுவதால் கழிவுநீர் வடிகால் அமைக்க கோரி அப்பகுதி பொதுமக்கள் தொடர்ந்து வழியுறுத்தி வருகின்றனர். அதனை தொடர்ந்து பல்லடம் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் 31.12.2020 அன்று மாவட்ட ஆட்சியர் அவர்களை நேரில் சந்தித்து நிரந்தர தீர்வாக பள்ளி கட்டிடங்கள் வழியாக வடிகால் அமைக்க அனுமதிக்குமாறு கோரிக்கை விடுத்தார்.

மேற்படி கோரிக்கையின் அடிப்படையில், கல்வி கூடங்களின் மதில் சுவர் ஒட்டி கழிவுநீர் கால்வாய் அமைக்க மாவட்ட ஆட்சியர், திருப்பூர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்: 25/2020/அ2 நாள்: 08.11.2021 ன் படி அனுமதி வழங்கியுள்ளார்.

எனவே, மாணவர்கள் மற்றும் பொதுமக்களின் சுகாதார நலனை கருத்தில் கொண்டு, நகராட்சி தொடக்கப்பள்ளி மற்றும் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியின் மதில் சுவர் ஒட்டி மங்கலம் சாலையில் ஏற்கனவே உள்ள கழிவுநீர் கால்வாய் வரை சுமார் 510 மீட்டர் நீளத்திற்கு கழிவுநீர் கால்வாய் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடுத் தொகை ரூ.36.00 இலட்சம் ஆகும். எனவே, பொதுமக்கள் நலன் கருதி மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி மன்றப் பொருள் வைக்கப்படுகிறது. (ந.க.எண்: 1745/2020/இ1)

**அலுவலகக் குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணியினை பொது நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2020–2021 ஆம் ஆண்டு திருத்திய வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண் 02/ நாள் : 12.01.2021 அனுமதிக்கப்படுகிறது.**

## பொருள் : 02

பல்லடம் நகராட்சியில் ‘பொது நிதி 2020–2021ன் கீழ் கீழ்க்காணும் பணிக்கு 05.01.2021ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப் புள்ளிகளின் ஒப்புநோக்குப் பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1 | நகராட்சிக்கு சொந்தமான நான்கு நகராட்சி தொடக்கப்பள்ளிகள் மற்றும் ஐந்து நகராட்சி நடுநிலைப் பள்ளிகளில் பெயர் பலகை எழுதுதல் | 1.00 | திரு.C.தேவராஜ், ஒப்பந்ததாரர், திருப்பூர். | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.12 % குறைவு |
| | | | திருவாளர்கள்.D.R. கன்ஸ்ட்ரக்ஸன்ஸ், ஒப்பந்ததாரர், ஒட்டன்சத்திரம். | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 1.78% அதிகம் |

(ந.க.எண்: 887/2020/இ1)

மேற்காணும் பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவான கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்க தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண் 03/ நாள் : 12.01.2021 அனுமதிக்கப்படுகிறது.**

**தனி அலுவலர்**
**பல்லடம் நகராட்சி**

**/உண்மைநகல்/**

**ஆணையாளர்**
**பல்லடம் நகராட்சி**

# <u>சிறப்புக்கூட்டம்</u>

பல்லடம் நகராட்சி தனிஅலுவலரின் சிறப்புக்கூட்டம் 2021 ம் ஆண்டு ஜனவரி மாதம் 05ம் நாள் செவ்வாய்க்கிழமை காலை 11.00 மணிக்கு பல்லடம் நகராட்சி அலுவலக நகர மன்றக்கூடத்தில் நடைபெற உள்ளது.

**தனி அலுவலர்,**
**பல்லடம் நகராட்சி**

**<u>பொருள் 01:</u>**

பல்லடம் நகராட்சி வார்டு எண்.18 சி.ஆர்.பிள்ளை லே அவுட் பகுதியில் கழிவுநீர் மற்றும் மழைநீர் வெளியேற வழியில்லாததால் அப்பகுதியில் தேங்கி சுகாதார சீர்கேடு ஏற்படுவதால் அப்பகுதியில் உள்ள க.ச.எண்.221/1 என இருந்ததில் தற்போது 221/1B1B என உள்ளதன் இட உரிமையாளர் திரு.M.ரத்தினசாமி த/பெ மாணிக்கம் என்பவர் பொதுமக்கள் நலன் கருதி தங்கள் இடத்தில் உள்ள நிலத்தினை கழிவுநீர் பாதை அமைக்க வேண்டி நகராட்சியின் பராமரிப்பிற்காக தானசாசன ஆவணம் வாயிலாக சார்பதிவாளர் அலுவலகம், பல்லடத்தில் தானசாசன ஆவண எண்.106/2021, நாள்.05.01.2021 ல் இருபுறமும் தென்வடல் 57 அடி இருபுறமும் கிழமேல் 4 அடி ஆக மொத்தம் 228 சதுரடி பரப்பளவுள்ள இடத்தினை தானமாக ஒப்படைப்பு செய்துள்ளார்கள். மேற்காண் இடத்தினை பொதுமக்களின் சுகாதார நலன் கருதி தானசாசன ஆவணம் வாயிலாக கழிவுநீர் பாதை அமைக்க ஒப்படைப்பு செய்த இடத்தினை நகராட்சியின் பராமரிப்பிற்கு ஏற்றுக்கொள்ளவும், அவ்விடத்தில் கழிவுநீர் பாதை அமைக்க நடவடிக்கை பொறியியல் பிரிவின் மூலம் நடைமுறைப்படுத்தவும் தனி அலுவலர் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. மேற்காண் இடத்தினை தானசாசன ஆவண எண்.106/2021, நாள்.05.01.2021 ல் தானமாக ஒப்படைப்பு செய்ததை ஏற்றுக்கொள்ள தனி அலுவலர் அனுமதி வழங்கலாம்.
2. பொதுமக்களின் சுகாதார நலன் கருதி கழிவுநீர் பாதை அமைக்க பொறியியல் பிரிவின் மூலம் நடவடிக்கை மேந்கொள்ள தனி அலுவலர் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.1579/2020/எப்1)

**<u>தீர்மானம் எண் 01/ நாள் : 05.01.2021 அனுமதிக்கப்படுகிறது.</u>**

**தனி அலுவலர்**
**பல்லடம் நகராட்சி**

**/உண்மைநகல்/**

**ஆணையாளர்**
**பல்லடம் நகராட்சி**